## (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**ஓ.எஸ்.எண்.168/2022** **நாள்.09.02.2026**

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09 நாள் வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரூபலிங்கம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | மாறன் | சாதி | |
| கிராமம் | கொடுக்கன்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 37 |

**வா.சா.3**

**குறுக்கு விசாரணை**

என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தது என்றால் வாதி தான் அழைத்தார். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் நிலம் கொடுப்பதாக சொல்லி பிறகு கொடுக்காததால் வழக்கு போட்டுள்ளார். வழக்குரை விபரங்களை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்தம் 22.01.2020 மற்றும் 03.02.2020 ஆகிய தேதிகளில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தங்களில் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் நானும், கலைச்செல்வனும் சாட்சி கையெழுத்து போட்டோம். எனது சொந்த ஊர் மலையனுார் ஒட்டிய கொடுக்கன்குப்பம் கிராமம். மலையனுார் பகுதியில் ஒரு சென்ட் ரூபாய் 15 லட்சம் முதல் 20 லட்சம் வரை விலை போகும் என்றால் நான் பெங்களூரில் இருப்பதால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கொடுக்கன்குப்பத்திலும் நிலத்தின் மதிப்பு அதிகமாகத்தான் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி ஊரில் வட்டிக்கு பணம் கொடுப்பார் என்றால் சரியல்ல. நானும், கலைச்செல்வனும், வாதியும் ஊரில் எப்போதும் ஒன்றாக இருப்போம் என்றால் சரியல்ல. வாதி கடை வைத்து நடத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி அந்த கடையை நடத்தி கொண்டே வட்டிக்கும் பணம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. வட்டிக்கு பணம் கொடுக்கும் போது அடமானம் மற்றும் கிரைய ஒப்பந்த ஆவணங்களில் சாட்சி கையெழுத்து செய்ய வாதி வழக்கமாக என்னையும், கலைச்செல்வனையும் அழைத்து செல்வார் என்றால் சரியல்ல. முதல் கிரைய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு

ஏற்பட்டது என்றால் ரூபாய். 20 ஆயிரம் தொகைக்கு ஏற்பட்டது. ரூபாய் 5000/- கிரையத்தின் போது கொடுக்கவேண்டும் என்று முடிவானது. அது 17 செண்ட் நிலம் தொடர்பாக ஏற்பட்டது. இரண்டாவது கிரைய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு ஏற்பட்டது என்றால் ரூபாய். 1 லட்சத்து அறுபது ஆயிரம் தொகைக்கு ஏற்பட்டது. அது 1 ஏக்கர் 50 செண்ட் நிலம் தொடர்பாக ஏற்பட்டது. நான் சொன்ன கணக்கு படி ஒரு செண்ட் ரூபாய் 1000/- மதிப்பு தான் வருகிறது என்றால் அந்த சமயத்தில் அவ்வளவு தான் மதிப்பு இருந்தது. வாதி அடமான கடன் தான் பிரதிவாதிக்கு கொடுத்தார் என்றாலும் ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும் சரியல்ல.